**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், புதுக்கோட்டை.**

**(கூடுதல் சார்பு நீதிமன்றம், புதுக்கோட்டை.)**

**Deposition of Witness for P.W.1**

**MCOP. No. 14 /2023**

சாட்சியின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு. ராஜேஸ்வரி கிரேடு–II பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லையா | தகப்பனார் பெயர்/கணவர் பெயர் | : | ராமு |
| கிராமம் | : | அரிமளம் | தாலுகா | : | திருமயம் |
| வயது | : | 37 | தொழில் | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 on the day of 20.08.2024.

ம.சா. 1அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

என் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன்.

1. விபத்து சம்மந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கை புகைப்பட நகல் ம.சா.ஆ.1

2. 11.08.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு மாற்றுதல் அறிக்கை நகல் ம.சா.ஆ.2

3. TN55BD 7593 என்ற எண் கொண்ட 4 சக்கர வாகனத்தின் Insurance புகைப்பட நகல் ம.சா.ஆ.3

4. TN55BD 7593 என்ற எண் கொண்ட 4 சக்கர வாகனத்தின் பதிவுசான்றிதழ் புகைப்பட நகல் ம.சா.ஆ.4

5. புதுக்கோட்டை பிவெல் மதுத்துவமனை வழங்கிய Discharge Summary அசல் ம.சா.ஆ.5

6. பிவெல் மருத்துவமனை வழங்கிய ரசீதுகள் எண்ணிக்கை 13 (2ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்) ம.சா.ஆ.6

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPD0G0000532023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com

www.ecourtsindia.com



7. பிவெல் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த போது வழங்கிய மருத்துவ குறிப்புகள் எண்ணிக்கை 15 – ம.சா.ஆ.7

8. பிவெல் மருத்துவமனை வழங்கிய ரசீதுகள் எண்ணிக்கை 18 (2ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்) ம.சா.ஆ.8

9. ஆதார் கார்டு நகல் ம.சா.ஆ.9

10. மனுதாரர் ஓட்டுநர் உரிமம் நகல் (2ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்) ம.சா.ஆ.10

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்தில் 2 வாகனங்கள் சம்மந்தபட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் முதன் முதலில் போலிசில் புகார் கொடுத்தது யார் என்றால் நான் தான் கொடுத்தேன். எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் தேதி நியாபகம் இல்லை. 01.07.2022 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதன் முதலில் விபத்து நடந்தவுடன் புதுக்கோட்டை தனியார் மருத்துவமனை பிவெல் ல் சிகிச்சைக்கு சேர்ந்தேன். எவ்வாறு விபத்து நடந்தது என மருத்துவர் குறித்துக் கொண்டார் என்றால் சரிதான். நான் காலதாமதமாக கொடுத்த புகாரில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் நின்று கொண்டிருந்தது, திடீரென ரிவெல்ஸ் ல் எடுத்ததால் என் மீது மோதி விபத்து ஏற்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் ரிவெல்ஸ் எடுக்கும் பொழுது ஹார்ன் அடித்தது என்றால் சரியல்ல. எந்த சமிக்கையும் செய்யவில்லை. இந்த இரண்டு வாகனங்களை தவிர வேறு வாகனங்கள் முன்போ பின்போ இல்லை என்றால் சரிதான். சாலையில் செல்லும் பொழுது இரண்டு

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPD0G0000532023/truecopy/order-1.pdf

வாகனங்களுக்கிடையே 10 அடி இடைவெளி விடவேண்டிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். 10 அடி இடைவெளி விட்டிருந்தால் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் ரிவெர்ஸ் ல் வருவது தெரியாமல் நான் தான் பின்பக்கம் மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனம் பொறுப்பல்ல நான் பொறுப்பு என்றால் சரியல்ல. இதை சரிசெய்ய தான் எனக்கு 7 நாட்கள் காலதாமதம் ஆனது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் வாகனத்திற்கு Insurance இல்லை. ஓட்டுநர் உரிமம், பதிவுசான்றிதழ் இருந்தது. ம.சா.ஆ.10ன் அசல் வீட்டில் உள்ளது அதனை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ10ல் ஓட்டுநர் உரிமம் வழங்கிய வட்டார போக்குவரத்து அலுவலகம் பெயர் படிக்கும் வண்ணம் இல்லை என்றாலும் அசலை பார்த்தால் தான் ம.சா.ஆ.10 ன் உண்மை தன்மை அறிய முடியும் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியவில்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சி சொன்னேனா என்றால் இதுவரை சாட்சியளிக்கவில்லை. மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் இல்லை மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டபிறகு தொடர் சிகிச்சையில் இருந்தேன் என்பதை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு இடது கை நான்கு விரல்கள் மற்றும் இடது கையில் அடிபட்டது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ விடுவிப்பு ஆவணத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. கொடுங்காயம் என்று

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPD0G0000532023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com

சொல்லப்பட்டுள்ளதை தவிர அதை மெய்ப்பிக்க குறிப்பிட்டு எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு இந்த விபத்தை பொறுத்து பணிபாதிப்போ, வருமான இழப்போ, நிரந்தர ஊனமோ ஏதும் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவ ஆவணங்களின் உண்மை தன்மை மருத்துவரை விசாரித்தால் தான் அறிய இயலும் என்றால் சரியல்ல. நான் பரிபூரணமாக குணமடைந்து தான் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டேன் என்றாலும் எனக்கு ஏதேனும் உபாதைகள் இருந்தால் மீண்டும் அதே மருத்துவமனையிலோ வேறு மருத்துவமனையிலோ மேல் சிகிச்சை செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு மத்திய அல்லது மாநில அரசால் காப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர்க்கு சம்பவ தேதியில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காப்பீட்டு விதிகள் மீறப்பட்டுள்ளதா 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றாலும் நஷ்டஈட்டுக்கு அடிப்படை ஆதாரம் இல்லை என்றாலும் சரியல்ல.

ஒம்/.செல்லையா

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/.வீ.வெங்கடேசபெருமாள்
கூடுதல் சார்பு நீதிபதி,
புதுக்கோட்டை.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPD0G0000532023/truecopy/order-1.pdf